விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 305 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 03 திங்கட்கிழமை (20.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உங்களுக்கு நம்பகமான மற்றும் மிகவும் பாதுகாப்பான
பொதிகள் சேவை
உங்கள் பார்சல் டெலிவரிக்கு தேடும் நபரா?
(5481)
மகாராஜா பொதிகள் சேவை
இல.25, கந்தசாமி கோவில் சாலை, வவுனியா
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
www.gtve.com | 011 4 654 444

## மழையுடனான காலநிலை வடக்கில் தொடர வாய்ப்பு


### பேராசிரியர் பிரதீபராஜா தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் தற்போது நிலவி வரும் மழையுடனான காலநிலை தொடர்வதற்குச் சாத்தியங்கள் காணப்படுகின்றன என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும் வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 02ஆம் பக்கம் பார்க்க

## யாழில் அரங்கேறிய போர்க்குற்றங்கள் தொடர்பில் எங்கும் சாட்சியமளிப்பேன்



### சோமரத்ன ராஜபக்ஷ சத்தியக் கடதாசி

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் நிகழ்த்தப்பட்ட சகல போர்க்குற்றங்கள் தொடர்பிலும் உள்நாட்டு நீதிமன்றத்திலோ சர்வதேச நீதிமன்றத்திலோ அல்லது ஏதேனும் அமைப்புக்கள் முன்னிலையிலோ சாட்சியம் அளிப்பதற்குத் தயாராக இருப்பதை உறுதிப்படுத்தி மரணதண்டனைக் கைதி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவினால் சிறைச்சாலையில் இருந்து அவரது சட்டத்தரணி ஊடாக 15ஆம் பக்கம் பார்க்க

- மண்டைதீவு சர்வதேச கிரிக்கெட் மைதானம் -

# தடுத்து நிறுத்தக் கோருகிறது இயற்கைப் பாதுகாப்புச் சங்கம்

### சுற்றுச்சூழல் மதிப்பீடு இல்லை எனக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

யாழ்ப்பாணம், மண்டைதீவில் அமையவிருக்கும் சர்வதேச கிரிக்கெட் மைதானம் மற்றும் விளையாட்டு வளாகத்தின் கட்டுமானப் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு வனவிலங்கு மற்றும் இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளதாக கொழும்பைத் தளமாகக் கொண்ட ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## விஜித ஹேரத் சவுதிக்கு விஜயம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி உத்தியோகபூர்வ விஜயமாகச் சவுதி அரேபியாவுக்குச் செல்லவுள்ளார்.

ரியாத் நகரில் நடை 15ஆம் பக்கம் பார்க்க

## மரநடுகைப் பகுதியில் மணற்கொள்ளை

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று பகுதியில், இயற்கைச் சமநிலையைப் பேணுவதற்காக 2017ஆம் ஆண்டு சுமார் பத்து ஏக்கர் பரப்பளவில் ஆரம்பிக்கப்பட்ட நிரந்தர மரநடுகைத் திட்டப் பகுதியில், தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வுகள் 15ஆம் பக்கம் பார்க்க

## போதை மாத்திரைகளுடன் மூன்று சிறுவர்கள் கைது

### யாழ்.நகர்ப் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் நேற்றுப் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது போதை மாத்திரைகளை வைத்திருந்த குற்றத்துக்காக மூன்று சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 17 தொடக்கம் 18 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் அவர்களிடம் இருந்து 20 போதை மாத்திரைகள் மீட் 15ஆம் பக்கம் பார்க்க




## சங்கிலியை அபகரித்தவர் 24 மணி நேரத்துக்குள் கைது

### சுன்னாகம் பொலிஸார் அதிரடி

(சுன்னாகம்)

யாழ்ப்பாணம், புன்னாலைக் கட்டுவன் பகுதியில் பெண் ஒருவரது தங்கச் சங்கிலியை அறுத்த நபர் ஒருவர் நேற்று சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் குறித்த பெண் பலாலி வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த குறித்த நபர் அந்தப் பெண்ணின் சங்கிலியை அறுத்துச் 15ஆம் பக்கம் பார்க்க

### சாவகச்சேரியில்

## போதைவஸ்துக்களுடன் 10 பேர் அதிரடிக் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போது போதைவஸ்துக்களுடன் பத்துப் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மனோகரன் கோணேஸ்வரனின் பணிப்புரைக்கமைய நேற்றுமுன்தினம் சனிக்கிழமை குறித்த விசேட செயற்றிட்டமானது முன்னெடுக்கப்பட்டது. 15ஆம் பக்கம் பார்க்க

## பாதாள உலகக் குழுவினரை கூண்டோடு ஒழித்துக் கட்டுவோம்



### அமைச்சர் விஜேபால சபதம்

(கொழும்பு)

பாதாள உலகக் குழுவினரைக் கூண்டோடு ஒழித்துக் கட்டியே தீருவோம். சில பாதாள உலகக் குழுவினர் இலங்கையின் அரசியலுக்குள்ளும் நுழைந்துவிட்டனர். அவர்களாலும் இனித் தப்ப முடியாது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுவரி உத்தியோகத்தர்களில் 30 வீதமானோர் மோசடியாளர்கள்

## ஆணையாளர் நாயகம் பகிரங்கக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை, மதுவரி உத்தியோகத்தர்களில் 20 முதல் 30 சதவீதமானோர் மோசடியாளர்கள் என மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் என்.எச். பிரேமரத்ன பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார். நிலைமை மாறிவிட்டதால், அவர்கள் தங்கள் பழைய பழக்கங்களை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அகில இலங்கை மதுவரி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் 74 ஆவது வருடாந்த மாநாடு நேற்றுமுன்தினம் (ஒக்டோபர் 18) கொழும்பில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே ஆணையாளர் நாயகம் என்.எச். பிரேமரத்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாட்டின் தேசிய பொருளாதாரத்தில் மதுவரித் திணைக்களம் முக்கிய பங்கு வகிக்கிறது. அரச வருமானத்தை ஈட்டித்தரும் துறைகளில் மதுவரித் திணைக்களம் பிரதானமாகக் காணப்படுகிறது. நடப்பாண்டில் 242 மில்லியன் ரூபாய் என்ற இலாப இலக்கினை அடைந்துள்ளோம். இந்த இலாபத்தை மேலும் எம்மால் அதிகரித்துக்கொள்ள முடியும்.

சட்டவிரோத மதுபான உற்பத்திகளைத் தடுப்பது மற்றும் அனுமதிபெற்ற மதுபான நிலையங்களிடமிருந்து வரிகளைப் பெறுவது திணைக்களத்தின் பிரதான பணியாகும் என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், மதுவரி உத்தியோகத்தர்களில் 20 முதல் 30 சதவீதமானோர் மோசடியாளர்கள் என்பதை குறிப்பிட வேண்டும். கடந்த காலங்களில் எவ்வாறு செயற்பட்டார்களோ அவ்வாறே தற்போதும் செயற்படுகிறார்கள். நிலைமை மாறிவிட்டது. ஆகவே பழைய பழக்கத்தைத் திருத்திக்கொள்ளுங்கள். சட்டத்துக்கு அமைய சிறந்த முறையில் செயற்படுங்கள் என்று குறிப்பிட்டுக்கொள்கிறேன் என கடுமையாக எச்சரித்தார். (ந-7)

## ஊடகவியலாளர் நிமலராஜனின் 25 ஆம் ஆண்டு நினைவேந்தல்




படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 25ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை கனடாவிலும் யாழ். ஊடக அமையத்திலும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் உள்ளிட்ட 39 தமிழ் ஊடகவியலாளர்களிற்கும் நீதி கோரி நிமலராஜனின் பிள்ளைகள் மற்றும் மாமனிதர் தராகி சிவராமின் பிள்ளைகள் இணைந்து விசாரணை அறிக்கைகளை கனடாவில் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை நிமலராஜனின் 25 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். ஊடக மையத்திலும் நேற்று இடம்பெற்றது. இதில் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (ந-7)

## தடுத்து...

சுற்றுச்சூழல் தாக்கத்தை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று அச்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவு உப்பளங்கள், சேற்றுத் திட்டுகள், உப்புநீர் சதுப்பு நிலங்கள்-கண்டல் இணைச்சூழல்கள் (salt marsh-mangrove ecotones), கடற்புற்கள் மற்றும் விரிவான இயற்கையான கண்டல் தாவரங்களின் வாழ்விடங்களைக் கொண்ட ஒரு சுற்றுச்சூழல் உணர்திறன் மிக்க மற்றும் மிக முக்கியமான பகுதியாகும்.

எனினும் தேவையான சுற்றுச்சூழல் மதிப்பீடுகள் எதையும் பூர்த்தி செய்யாமலேயே மைதானத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

இது இலங்கையின் சுற்றுச்சூழல் சட்டங்களை அப்பட்டமாக மீறும் செயல் என்று சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வளங்கள் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ், கடலோரப் பகுதிக்குள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு அபிவிருத்திப் பணிக்கும், அது நிலையானதா? என்பதை உறுதிப்படுத்த, முதலில் ஆரம்ப சுற்றுச்சூழல் பரிசோதனை அல்லது சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு நடத்தப்படுவது கட்டாயமாகும்.

சட்டத்தின் பிரிவு 16, இவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்தின் முன் அனுமதி அவசியம் என்பதைத் தெளிவாகக் கூறுகிறது.


திட்டத்தின் அளவு மற்றும் அதனால் ஏற்படக்கூடிய தாக்கங்களைக் கருத்தில் கொண்டு, பொதுமக்களின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த, கட்டாயமாக ஒரு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும் என வனவிலங்கு மற்றும் இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்தச் சுற்றுச்சூழல் அமைப்புகளைச் சீர்குலைப்பது, மீளமுடியாத சுற்றுச்சூழல் சேதத்தை ஏற்படுத்தும் என்றும் அப்பகுதி மக்களுக்கு அனர்த்த அபாயங்களை அதிகரிக்கும் என்றும் அச்சங்கம் எச்சரித்துள்ளது.

இந்தத் திட்டம் உள்நாட்டுச் சட்டத்தை மீறுவதுடன் மட்டுமல்லாமல், ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான கட்டமைப்பு மாநாடு மற்றும் பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை ஏற்றுக்கொண்ட சர்வதேச காலநிலை சார்ந்த கடப்பாடுகளையும் பலவீனப்படுத்துவதாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

அபிவிருத்தி என்ற பெயரில் விஞ்ஞான மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புகளை புறக்கணிப்பதற்கு இது ஒரு ஆபத்தான முன்னுதாரணத்தை அமைக்கும் என்றும் வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-7)

25 ஆம் ஆண்டு நினைவு




அமரர் கந்தப்பு தவராசா

திதி : சதுர்த்தசி 20.10.2025

சில அடிகள் நடந்தோம், அடுத்த அடியில் நீங்கள் இல்லை!!
ஆனால் உங்கள் நிழல் எங்களை விட்டுப் போகவில்லை..
உங்கள் குரல் மனதுக்குள் ஒலித்துக் கொண்டே இருக்கிறது,
துணிவோடு இருங்கள் என்று சொல்லிய உங்கள் குரல்
இன்னும் எங்கள் மூச்சில் இருக்கிறது!
விழுந்தபோது தூக்கிய கைகள் இன்று இல்லை,
ஆனால் என்றும் உங்கள் நினைவுதான் எங்கள் வலிமை அப்பா!!

மாணிக்கவாசகர் வீதி,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.
(C-4149)
மனைவி, பிள்ளைகள்

## மழையுடனான...

வடக்கு மாகாணத்தில் தற்போது நிலவிவரும் மழையுடனான காலநிலை தொடர்வதற்குச் சாத்தியங்கள் உள்ளன.

தற்போது குமரிக் கடலுக்கு அண்மித்ததாக நிலவுகின்ற காற்றுச் சுழற்சியின் விளைவாக நாட்டின் பல பகுதிகளுக்கும் தொடர்ச்சியான மழை கிடைத்து வருகின்றது. அத்துடன் எதிர்வரும் 23ஆம் திகதி வங்காள விரிகுடாவில் புதிய தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது.


தற்போதைய மாதிரிக் கணிப்புக்களின் அடிப்படையில் இந்தத் தாழமுக்கமானது ஒரு புயலாக வலுப்பெற்று அல்லது ஒரு வலுக்குறைந்த புயலாக மாற்றம்பெற்று இந்தியாவின் ஆந்திராவில் நெல்லூருக்கு அருகில் கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தத் தாழமுக்கத்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு நேரடிப் பாதிப்புகள் எவையும் இல்லை. ஆனால் மழையுடனான காலநிலை தொடர்வதற்குச் சாத்தியங்கள் காணப்படுகின்றன. தாழமுக்கம் காரணமாக எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை வடக்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்குக் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும்.

அத்துடன் நவம்பர் மாதத்தின் முதலாவது வாரத்திலும் தாழமுக்கம் ஏற்படுவதற்குச் சாத்தியங்கள் காணப்படுகின்றன என்றுள்ளது. (ந-7)

கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்
திரு: பா.பரந்தாமன் அவர்களின் அன்புச் சகோதரன்



அமரர் பாலகுமார் ரோயல்குமார்

தோற்றம் 27.08.1983
மறைவு 18.10.2025

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-4151)

நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம்,
முத்துஐயன் கட்டு பிரிவு, ஒட்டுசுட்டான்.
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதர்மத்தை தோற்கடித்து அநீதியை வெல்வோம்!



## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி அநுரகுமார

**(கொழும்பு) —**

**தீபாவளி உண்மையிலேயே ஒரு ஒளிப் பண்டிகை. தீபாவளியன்று ஒவ்வொரு வீட்டையும் ஒளிரச் செய்யும் விளக்குகளுடன், "வளமான நாடு - அழகான வாழ்க்கை" தொடர்பிலான இந்த நாட்டு மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற நமது ஒன்றிணைந்து செல்லும் பாதை இன்னும் ஒற்றுமையாக இருக்கட்டும் என்று பிரார்த்தித்து இலங்கையிலும் உலகெங்கிலும் வாழும் அனைத்து இந்து பக்தர்களுக்கும் அவர்களின் இதயங்களை பிரகாசமாக்கும் மகிழ்ச்சிகரமான தீபாவளி நல்வாழ்த்துக்கள் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.**

அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த தீபாவளி வாழ்த்து செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகெங்கிலும் வாழும் இந்து பக்தர்களால் மிகுந்த பக்தியுடன் கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது.

கிருஷ்ண பகவான் நரகாசுரனை அழித்தமையை நினைவு கூர்ந்து, அதர்மத்தை தோற்கடித்து அநீதியை வென்றது போன்று, அனைவரின் இதயங்களிலும் இருள் நீங்கி ஒளி பரவட்டும் என்ற பிரார்த்தனையை தாங்கி அவர்கள் மத அனுஷ்டானங்களில் ஈடுபடுகின்றனர்.

இந்தக் கொண்டாட்டம் தீமைக்கு எதிராக நன்மை வெற்றி பெற்றதை குறிக்கிறது.

தற்போது நம்முன்பாக உள்ள பாரிய சவாலைப் போன்றே நாட்டின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும் போதைப்பொருள் மற்றும் மறைந்துள்ள குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

அனைவரினதும் வாழும் உரிமையை உறுதி செய்வதும், அதை ஒரு சிறந்த மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உரிமையாக மேம்படுத்துவதும் எங்கள் முயற்சிகளின் முக்கிய நோக்கமாகும்.

அதேபோல், நமது பிரஜைகள் மட்டுமன்றி இந்த நாட்டில் வசிக்கும் மற்றும் வருகை தரும் அனைத்து மக்களின் உடல், மன, பௌதீக மற்றும் உணர்வுகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பிற்காக அரசாங்கமென்ற வகையில் நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம்.

அனைத்து மதவாத மற்றும் இனவாத சக்திகளையும் தோற்கடித்து சமூக நீதியை நிலைநாட்டவும், அனைவரும் தங்கள் அனைத்து சிவில், அரசியல் மற்றும் கலாச்சார உரிமைகளையும் தடையின்றி அனுபவிக்கக்கூடிய, அனைவரின் சுதந்திரமும் கண்ணியமும் பாதுகாக்கப்படும் ஒரு பாதுகாப்பான நாட்டைக் கட்டியெழுப்பவும் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம் என்பதை இதன் மூலம் வலியுறுத்துகிறேன். (நி)


# மணிவிழா வாழ்த்துக்கள்

## திருமதி. மேகலா – இராஜேந்திரன்

(SLTS - I, Sp.Trd English)



**சேவை விபரம்**

- யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை - 27.04.1987 - 30.10.1988
- யா/ வேலணை சரஸ்வதி வித்தியாசாலை - 31.10.1988 - 19.01.1992
- பலாலி ஆசிரியர் கலாசலை -20.01.1992 - 31.12.1993
- யா/வேலணை சரஸ்வதி வித்தியாசாலை - 01.01.1994 - 15.07.1997
- வ/வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலை - 16.07.1997 - 05.08.1997
- வ/வவுனியா மத்திய மகா வித்தியாலயம் - 06.08.1997 - 15.01.2003
- யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை - 16.01.2003 - 15.06.2010
- யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாசாலை - 16.06.2010 - 06.10.2011
- யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை - 07.10.2011 - 01.01.2020
- யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம் - 02.01.2020 - 16.03.2021
- யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி - 17.03.2021 - 19.10.2025

**உயர்ந்த சேவைக்கு நிறைந்த வாழ்த்துக்கள்.....**

அன்பான மொழி பேசி பண்பாக பழகிடும் பரந்த உள்ளம் கண்டோம் – உம்மிடம்
அர்ப்பணிப்பான கல்விச் சேவைக்காய்
கல்விப் புலத்தின் கலங்கரைக்கு மணிவிழா காணும் தருணத்தில் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

(1664)

**வாழ்த்துவோர் – ஆசிரியர் கழகம், யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சொற் செல்வரின் தீபாவளி ஆசிச்செய்தி



இந்து மக்களின் இனிய பண்டிகைகளில் ஒன்று தீபாவளி. நரகாசுரன் என்ற அசுரன் அழிக்கப்பட்டு எல்லோரும் இன்புற்று வாழ கிருஷ்ணபரமாத்மா வழி தந்த நாள் இத்திருநாள் ஆகும். இப் புனித நாளில் சகலரும் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்யுங்கள். வீடுகளில் மங்கள விளக்கேற்றி எல்லோரும் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்று மன்றாடுங்கள். நீதியும் நிலையான தர்மமும் எங்கும் பிரகாசிக்க அனைவருக்கும் இதயபூர்வமான தீபாவளி நல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.


ஈழத்திருநாட்டில் எம் மக்கள் நிறைவாக வாழ இறையருள் கைகூட வேண்டும். எமது இளைய தலைமுறை கல்வியிலும் ஏனைய துறைகளிலும் மீண்டும் சிறக்க இந்நாளில் அனைவரும் பிரார்த்திப்போம். மனித நேயமற்ற மாசுகள் எம்மைச் சூழ்ந்து உலாவுகிறது. அவற்றில் போதைப் பொருள் முதலிடம் வகிக்கிறது. இக் கொடூரம் எம் மண்ணில் இருந்து முற்றாக விடுபட தெய்வங்களை வேண்டுகிறோம். அரிய பிறப்பாகிய மானிடப்பிறப்பின் மகத்துவத்தை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். இப் பிறவியில் நல்லவற்றைக் கற்று நல்ல வண்ணம் வாழ்ந்து பிறர் வாழ நல்லன செய்வதே நம் கடனாகும். அதற்குரிய கருணை, இரக்கம், அரவணைப்பு அனைவரிடமும் உருவாக வேண்டும். தீபத் திருநாளாகிய ஒளியை நோக்கி நல்வழியில் பயணம் செய்வோம்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
**தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பளை.**
**தலைவர்,**
**சிவபூமி அறக்கட்டளை.**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பம் பொங்கும்
தீபத் திருநாள் வாழ்த்துகள்

ஸ்ரீ முருகன்
## SRI MURUGAN
Communication Agency post office

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை, Western Union மூலம் அனுப்பிய பணத்தைபெற நீண்ட கால அனுபவமும், அதிவிரைவு சேவையுடன் கூடிய நம்பகமாக பாதுகாப்பான சேவைகள். இவை அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட நாடுங்கள்.

Western Union | MMBL Money Master | Ria | MoneyGram | aramex | DHL | Dialog | Development Lottery Enriching Your Life

Email: Srimurugan09@gmail.com, srimurugan303@gmail.com
No.303, K.K.S Road, Jaffna, Srilanka
+ 94 21 222 2670 / 5392
+ 94 21 222 3214
(C-4143)



தித்திக்கும் தீபாவளித் திருநாளில் அனைவரது இல்லங்களிலும் நல்ஒளி வீச வாழ்த்தி மகிழ்கின்றோம்

## TKT Mark
நல்லெண்ணெய்

4 ஆவது தலைமுறையாக இன்றும் அதே தரத்துடன் பாரம்பரிய பழமை முறையில் மரச்செக்கிலிருந்து ஊற்றியெடுக்கப்படும் நல்லெண்ணெய்

No.1

It's an Authentic Sesame Oil and The Best One in Our Products

மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்...



தயாரிப்பாளரும் ஏக விநியோகத்தரும்

தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்
நவாலி வீதி, மூத்த நயினார் கோவிலடி,
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.
(C-4147)

T.P: 077 832 8828, 077 652 8633, 021 225 5718


### தீபாவளி–மனத்தின் ஒளி

இருள் நீங்கும் வெளிச்சம் தீபம்
மனம் நீக்கும் வெளிச்சம் அறிவு
தீபாவளி தரும் நம்பிக்கை வெளிச்சம்
உள்ளம் தரும் அமைதியின் நலம்

மன அழுத்தம் கரையும் நேரம்
நல்லுணர்வு மலரும் தீபம்
தீய எண்ணம் கருகும் தருணம்
நல்ல மனம் பிறக்கும் விழா!

சிந்தனை தீயாய் எரியட்டும்
துயரம் புகையாய் மாறட்டும்
பாசம் ஒளிரும் இதயம் இன்று
சமூகமே ஒற்றுமை பூங்கா

நடராசா கோபிராம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வாசகர்கள், விற்பனை முகவர்கள், விளம்பரதாரர்கள்
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!


கணனி உலகின் முதல்தர அனுபவம் வாய்ந்த நிறுவனம்


UNITY COMPUTERS

## Unity PC Systems
CCTV Jaffna Pvt Ltd

அனைவரின் வாழ்விலும்
இருள் நீங்கி
ஒளி பிறக்க தீபத் திருநாள்
நல்வாழ்த்துக்கள்



உங்கள்
அலுவலகங்கள்,
பாடசாலைகள், கடைகள்
கணனிமயமாக்க வேண்டுமா?
எம்மை நாடுங்கள்!



கணனிகள், மடிக்கணனி,
CCTV Installation,
கணனி உபகரணங்கள்,
என அனைத்தையும் பெற
எம்மை நாடவும்.

யாழ் கிளை
இல.74, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 0666 077 344 6194 / 077 742 5741

Unity PC Systems Jaffna
Yathu31@gmail.com
இல.394,1/1, காலி வீதி, கொழும்பு - 06
011 236 1777 077 789 0532
(C-4146)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிருபா லேணர்ஸ்

## KIRUBAA LEARNERS කිරුබා ලර්නර්ස්

அரச அங்கீகாரம் பெற்ற வடக்கின் முதல் தர
சாரதி பயிற்சிப் பாடசாலை

HOTLINE
077 722 5292

தற்போது
தெல்லிப்பளையிலும்
077 9988 944

- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.



தலைமையகம்
36, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 6699 / 0767 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| யாழ் நகர் 021 222 4353 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 077 120 5576 | சுன்னாகம் 021 224 2022 |
| விஸ்வமடு 077 8585 263 | வேலணை 077 222 7121 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |

(C-4144)


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனியதீபாவளி வாழ்த்துக்கள்


STS Since 2009


# SMART TECH SOLUTION


## உங்கள் பாதுகாப்பில் நாங்கள் அக்கறை கொள்கிறோம்.


EZVIZ™ Creating Easy Smart Homes | HIKVISION® | HIKSEMI


TY1-1080P



H6C PRO-2K/2K+/3K



H8C PRO-2K/3K/4K/2K 4G





H9C-2K/3K

NEW


HB90x 2k+ Dual solar 4g camera


H90 2k+ dual

சிறப்பு விலைக்கழிவு
30%

அங்கீகரிக்கப்பட்ட
விற்பனை முகவர்

பொருத்துனர்கள் மற்றும் விற்பனையாளர்கள், விசேட
விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

(C-4145)

இல, 282, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
071 684 3023, 021 221 3023
facebook.com/smarttechsolution.lk


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாரதம்



# ஆபரேசன் சிந்தூர் வெறும் டெய்லர் தான்!

## பகிரங்க எச்சரிக்கை விடுத்த இந்தியா

(டில்லி)

**ஆபரேஷன் சிந்தூர் வெறும் ட்ரைலர் தான், பாகிஸ்தானின் ஒவ்வொரு அங்குலமும் பிரம்மோஸின் கட்டுப்பாட்டு எல்லைக்குள் உள்ளது என்று மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் எச்சரிக்கை விடுத்துள்ள சம்பவம் உலக நாடுகளின் கவனத்தை பெற்றுள்ளது.**

உத்தரபிரதேச மாநிலம், லக்னோவில் உள்ள பிரம்மோஸ் ஏவுகணையின் உற்பத்தி மையத்தில் பிரம்மோஸ் ஏவுகணைகள் வெற்றிகரமாக தயாரிக்கப்பட்டு இந்திய இராணுவத்துக்கு ஒப்படைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அப்போது பேசிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், பிரம்மோஸ் வெறும் ஏவுகணை அல்ல அது இந்தியாவின் உள்நாட்டு வலிமைக்கு ஒரு சான்றாகும்.

முன்னதாக, விழா ஒன்றில் இந்தியாவுடனான மோதல் குறித்து பேசியிருந்த பாகிஸ்தான் இராணுவத் தளபதி பீல்டு மார்ஷல் சையத் அசிம் முனீர், “அணுசக்திமயமான சூழலில் தற்போது போருக்கு இடமில்லை.

அதேசமயம் தங்கள் மீதான தாக்குதலுக்கு பாகிஸ்தான் பதிலடி கொடுக்கும்” என ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலை குறிப்பிடாமல் அவர் பகிரங்க எச்சரிக்கையை விடுத்தார். அதற்கு பதிலடி கொடுக்கும் விதமாகவே ராஜ்நாத் சிங் இவ்வாறு பேசியுள்ளார். (நி)

# பெற்றோரை புறக்கணிக்கும் ஊழியருக்கு சம்பளத்தில் ஒரு பகுதி குறைப்பு

(டில்லி)

பெற்றோரை புறக்கணிக்கும் அரசு ஊழியர்களுக்கு, அவர்களது சம்பளத்தில் ஒரு பகுதியை குறைக்க தெலுங்கானா அரசு தீர்மானித்துள்ளது.



தெலுங்கானாவில், அரசு பணிக்கு.தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி நியமன கடிதம் வழங்கும் நிகழ்வு ஹைதராபாதில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில் அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே முதல்வர் ரேவந்த் ரெட்டி இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரச்சினைகளுடன் வரும் பொது மக்களிடம் அரசு ஊழியர்கள் கருணையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் பெற்றோரை அரசு ஊழியர்கள் புறக்கணித்தால், அவர்களது சம்பளத்தில், 10 முதல் 15 சதவீதம் வரை குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும் இவ்வாறு பெறப்பட்ட தொகையை, ஊழியர்களின் பெற்றோர் வங்கி கணக்கில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஊழியர்கள் சம்பளம் பெறுவது போல் உங்கள் பெற்றோரும் மாத சம்பளம் பெறுவது, இதன் மூலம் உறுதி செய்யப்படும் எனவும் இது தொடர்பாக புதிய சட்டத்தை கொண்டு வர மாநில அரசு முடிவு செய்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (நி)

# பங்களாதேஷ் டாக்கா சர்வதேச விமான நிலையத்தில் பாரிய தீ விபத்து



(டாக்கா)

நாளாந்தம் நூற்றுக் கணக்கான விமான சேவைகள் முன்னெடுக்கப்படுகின்ற பங்களாதேஷ் தலைநகர் டாக்காவிலுள்ள சர்வதேச விமான நிலையத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

பங்காளதேஷ் டாக்கா Hazrat Shahjalal சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

விமான நிலையத்தின் சரக்கு முனையத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக விமான நிலைய முகாமைத்துவ பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

இதேவேளை தீ விபத்தினை தொடர்ந்து விமான நிலையத்தில் விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதுடன் டாக்கா விமான நிலையத்திற்கு வரவிருந்த விமானங்கள் ஏனைய நகரங்களுக்கு திருப்பி விடப்பட்டுள்ளன.

அத்துடன் டாக்காவில் இருந்து புறப்படவிருந்த விமானங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதன் காரணமாக பயணிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

தீ விபத்தில் ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பாக இது வரை தகவல் வெளியாகவில்லை என்பதுடன் தீயணைப்பு மற்றும் மீட்புக் குழுவினர் தீயை அணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (நி)

## எங்கு தெரியுமா?

# ஒரு குழந்தை பெற்றால் 21 மில்லியன் ரூபா மானியம்

(சியோல்)

தென் கொரியாவில் பிறப்பு விகிதத்தை அதிகரிப்பதற்காக சில நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களுக்கு 72,000 அமெரிக்க டொலர் மானியங்களை வழங்குவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பூ-யுங் போன்ற கட்டுமான நிறுவனங்கள் உட்பட பல நிறுவனங்கள், ஊழியர்களுக்குக் குழந்தை பிறப்பிற்காக இத்தகைய பெரிய நிதிச் சலுகைகளை வழங்கத் தொடங்கியுள்ளன.

சியோலை தளமாகக் கொண்ட பூ-யுங் நிறுவனம், அதன் ஊழியர் ஒவ்வொரு குழந்தை பெற்றெடுக்கும் போதும் நிபந்தனையின்றி சுமார் 72,000 அமெரிக்க டொலரை (இலங்கை மதிப்பில் சுமார் 21 மில்லியன் ரூபா) நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்துவதாக அறிவித்துள்ளது. இதற்கு அரசு வரி விலக்கு அளிக்கிறது.

இந்த மானியங்களைப் பெற்ற சுமார் 100 ஊழியர்களில் எவரும் நிறுவனத்தை விட்டு வெளியேறவில்லை. மேலும் இது குழந்தைகளைப் பெற ஊழியர்களை ஊக்குவிப்பதாக நிறுவனம் நம்புகிறது.

நிறுவன கலாசாரத்தில் கூட ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. தென் கொரியாவின் பிறப்பு விகிதம் ஒரு பெண்ணுக்கு 0.75 வீதமாகக் குறைந்துள்ளது. இது உலகிலேயே மிகக் குறைந்த விகிதமாகும். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ட்ரம்பிற்கு எதிராக வெடித்த போராட்டம்!

## வீதிகளில் இறங்கிய 70 இலட்சம் மக்கள்




(வோஷிங்டன்) "No kings" என்ற முழக்கத்துடன் அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்புக்கு எதிராக மிகப் பெரிய போராட்டம் வெடித்துள்ளது.

ட்ரம்ப் அரசின் குடியேற்றவாசிகளுக்கு எதிராக அடக்குமுறைகள், அரசுத் துறைகளில் மேற்கொள்ளப்படும் அதிகப்படியான பணி நீக்கங்கள், பொருளாதார கொள்கைகள் உள்ளிட்டவை அந்நாட்டில் அதிருப்தி அலையை ஏற்படுத்தி வருகிறது.

சர்வாதிகார போக்குடன் செயற்படுவதாக ட்ரம்ப் நிர்வாகத்திற்கு எதிராக அமெரிக்கா முழுவதும் தொடர்ந்து போராட்டங்களை வழிநடத்தி வரும் பல இடதுசாரி சார்பு அமைப்புகளின் கூட்டணியே நோ கிங்ஸ் ஆகும்.

இதே கூட்டணி முன்பு ஜூன் மாதம் நோ கிங்ஸ் போராட்டத்தை நடத்தியது. இந்த இயக்கத்தில் 200 இற்கும் மேற்பட்ட அமைப்புகள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் மிகப் பெரிய அளவில் போராட்டம் ஒருங்கிணைக்கப்பட்டது.

"மன்னர்கள் வேண்டாம்" என்ற முழக்கத்துடன் ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டங்களில் நேற்று முன்தினம் நாடு முழுவதும் 2,700 நகரங்களில் 7 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பங்கேற்றனர் என்று நோ கிங்ஸ் இயக்கம் தெரிவித்தது.

நியூயோர்க் நகரில், 100,000 இற்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் டைம்ஸ் சதுக்கத்தில் கூடி, "மன்னர்கள் இல்லை", "ஜனநாயகம், சாம்ராஜ்யம் அல்ல", "மக்களுக்கே அதிகாரம்" என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி முழக்கங்களை எழுப்பினர்.

இதேபோல், வோஷிங்டன் டிசி, லாஸ் ஏஞ்சல்ஸ், டென்வர், கலிபோர்னியாவின் சான் டியாகோ, சான் பிரான்சிஸ்கோ, சிகாகோவில் பெரிய அளவிலான ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. (நி)

# உடனடி போர் நிறுத்தத்திற்கு பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் சம்மதம்

## கட்டார் அறிவிப்பு

(டோஹா) பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானுக்கு இடையே எல்லைப் பகுதியில் கடந்த ஒரு வாரமாக நீடித்து வந்த மோதலை முடிவுக்குக் கொண்டு வர கட்டாரும் துருக்கியும் மத்தியஸ்த முயற்சிகளை மேற்கொண்டு வந்தன.

ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட 48 மணி நேர போர் நிறுத்தம் முடிவுக்கு வந்த பின் கடந்த வெள்ளிக்கிழமை ஆப்கானிஸ்தானில் பாக்டிகா மாகாணத்தின் அர்குன் மற்றும் பர்மல் மாவட்டங்களில் பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் கிரிக்கெட் வீரர்கள் 3 பேர் உட்பட 8 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து இரு நாடுகளும் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும் என கட்டார் அழைப்பு விடுத்து இருந்தது.

இதன்படி கட்டார் தலைநகர் டோஹாவில் இரு தரப்புக்கும் இடையே நேற்று பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஆப்கானிஸ்தான் தரப்பில் பாதுகாப்புத் துறை அமைச்சர் முல்லா முஹம்மது யாக்கூப் தலைமையிலான குழுவும், பாகிஸ்தான் தரப்பில் பாதுகாப்புத் துறை அமைச்சர் கவாஜா முஹம்மது ஆசிப் தலைமையிலான குழுவும் பேச்சுவார்த்தையில் பங்கேற்றன. இந்நிலையில் பேச்சுவார்த்தையில் இரு தரப்பினரும் உடனடியாக சண்டையை நிறுத்த ஒப்புக் கொண்டதாக கட்டார் வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

சண்டை நிறுத்தத்தின் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும் நீடிக்க செய்வதற்கும் வரும் நாட்களில் தொடர் கூட்டங்களில் பேசி முடிவுக்கு வரவும் இரு தரப்பினரும் சம்மதித்துள்ளதாக அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ள கிரிப்டோகரன்சி

உலக சந்தையில் கிரிப்டோகரன்சி ஒரே நாளில் 230 பில்லியன் டொலர் சரிவை சந்தித்துள்ளது.

கிரிப்டோகரன்சி மதிப்பானது எப்போதும் குறையாது என்ற நம்பிக்கையில் பலர் இருந்து வருகின்றனர். இந்த நிலையில், சமீபமாக கிரிப்டோ சந்தையிலும் நிலையற்ற தன்மை இருந்து வருகின்றது.

இதன் தொடர்ச்சியில் கடந்த வெள்ளிக்கிழமையில் வெறும் நான்கு மணி நேரங்களில் 128 டொலர் சரிந்ததுடன், ஒரே நாளில் 230 பில்லியன் டொலர் சரிந்துள்ளது.

வியாழக்கிழமையில் இருந்த 3.78 டிரில்லியன் டொலரில் இருந்து, 3.54 டிரில்லியன் டொலர் வெள்ளிக்கிழமையில் சரிவடைந்துள்ளது.

2022 இல் நிகழ்ந்த எஃப்டிஎக்ஸ் பரிமாற்றத்தின் வீழ்ச்சியையே சரிவு நினைவூட்டதாக முதலீட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அமெரிக்கா மற்றும் சீனா உறவு நிலையற்றதாக இருக்கும் வரையில் கிரிப்டோ சந்தையும் நிலையாக இருக்க முடியாது என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (நி)

# வெள்ளை மாளிகையில் இருந்து வெறுங்கையுடன் வெளியேறிய ஜெலென்ஸ்கி

(வோஷிங்டன்) அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உக்ரைனுக்குத் தேவைப்படும் டோமாஹாக் ஏவுகணைகளை வழங்கத் தயாராக இல்லை என்று குறிப்பிட்டுள்ளமை அந்நாட்டு ஜனாதிபதிக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி வெள்ளை மாளிகைக் கூட்டத்திலிருந்து வெறுங்கையுடன் வந்த நிலையில் குறித்த கருத்து வெளியாகியுள்ளது.

சுமுகமான இருதரப்புப் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, தானும் ட்ரம்பும் நீண்ட தூர ஏவுகணைகள் பற்றிப் பேசியதாகவும், ஆனால் "அமெரிக்கா ஒரு தீவிரத்தை விரும்பவில்லை என்பதால்" இந்த விவகாரம் குறித்து அறிக்கைகளை வெளியிட வேண்டாம் என்று முடிவு செய்ததாகவும் ஜெலென்ஸ்கி கூறியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



குறித்த சந்திப்பைத் தொடர்ந்து, உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று ட்ரம்ப் சமூக ஊடகங்களில் அழைப்பு விடுத்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் தொலைபேசியில் பேசிய ட்ரம்ப் விரைவில் ஹங்கேரியில் அவரைச் சந்திக்க ஒப்புக்கொண்டதாக பேசிய ஒரு நாள் கழித்து, குறித்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

ரஷ்ய எண்ணெய் மற்றும் எரிசக்தி வசதிகளைத் தாக்க டோமாஹாக்ஸைப் பயன்படுத்துவது புடினின் போர் பொருளாதாரத்தை கடுமையாக பலவீனப்படுத்தும் என்று ஜெலென்ஸ்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ட்ரம்ப் அதை நிராகரிக்கவில்லை என்றாலும், கடந்த வெள்ளிக்கிழமை வெள்ளை மாளிகையில் அவர் பேசிய தொனி உறுதியற்றதாக இருந்தது என்றும் ஜெலென்ஸ்கி கூறியுள்ளார்.

முன்னதாக டோமாஹாக் ஏவுகணை தொடர்பிலான பேச்சுவார்த்தை வெளிவர ஆரம்பித்ததும் புடின் அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைக்கு தயாராகி வருவதாகவும் அவர் விளக்கியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அறிஞர் சுவாமி ஞானப்பிரகாசரின் முப்பொன் விழா

(யாழ்ப்பாணம்)

தமிழ் அறிஞர் சுவாமி ஞானப்பிரகாசரின் முப் பொன் விழாவின் ஆய்வரங்கத் தொடக்க நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணி முதல் 11 மணி வரை யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள் ளது.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங் கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமை யில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்தினை யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அ.சுகன்யா, வரவேற்புரை யினை கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை அதிபர் ச.லலீசன், ஆசியுரையினை இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் பிரம்மஸ்ரீ கு.வை.கா. வைத்தீஸ்வரக் குருக்கள் மற்றும் யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை பி.ஜே.ஜெபரட்ணம் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

அத்துடன் வெளியீட்டுரை யினை யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் திருமதி சுபதினி ரமேஸ் நிகழ்த்தவுள்ளார். அதனைத் தொடர்ந்து 'ஆய்வரங்க மலர்' வெளியீடும் இடம்பெறவுள்ளது.

மாலை நிகழ்வுகள் பிற் பகல் 4 மணிமுதல் 7 மணி வரை இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள கலைத்தூது கலைய கத்தில் இடம்பெறவுள்ளது.

விழாக் குழுவின் இணைத் தலைவர் அருட்தந்தை ஜெரோ செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்பு நடனத்தை யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி கள், ஆசி யுரையினை யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட் தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆகியோர் வழங்கவுள்ள னர்.

அதனைத் தொடர்ந்து வாழ்த்துரையினை யாழ்ப் பாணத் தமிழ்ச்சங்க பெருந் தலைவர் வாழ்நாள் பேராசி ரியர் அ.சண்முகதாஸ் மற்றும் யாழ்.அமலமரித் தியாகிகள் மாகாண முதல்வர் அருட் தந்தை போல்ஜெயந்தன் பச்சேக் (அ.ம.தி) ஆகியோர் நிகழ்த்த வுள்ளனர்.

அத்துடன் வடமாகாணப் பாடசாலை மாணவர்களி டையே நடத்தப்பட்ட போட்டி களுக்கான பரிசளிப்பும் சான்றிதழ் வழங்கல் மற் றும் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளதென ஏற்பாட்டா ளர்கள் அறிவித்துள்ளனர்.

(நி-3)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மீள் திருத்த பெறுபேறுகள் வெளியானது

(கொழும்பு)

2025 ஆகஸ்ட் 10 ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புல மைப்பரிசில் பரீட்சையின் மீள் திருத்த பெறுபேறுகள் வெளி யிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள் ளது.

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தி யோகப்பூர்வ வலைத்தளமான www.doenets.lk அல்லது www.results.exams.gov.lk க்கு சென்று தேர்வு எண்ணை உள்ளிடுவதன் மூலம் முடிவு களைப் பெறலாம்.

அத்துடன், பெறுபேறுகள் தொடர்பாக ஏதேனும் சிக்கல் இருந்தால், இலங்கை பரீட் சைகள் திணைக்களத்தின் பள்ளித் தேர்வுகள் அமைப்பு மற்றும் முடிவு கிளையை 1911, 0112784208, 0112784537, 0112785922, 0112784422 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (நி)

# 35 மலேரியா நோயாளர்கள் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

இந்த ஆண்டு இதுவரை யான காலப்பகுதியில் நாட் டில் மொத்தம் 35 மலே ரியா நோயாளர்கள் அடை யாளம் காணப்பட்டுள்ளதாக வும் ஒரு மரணம் பதிவாகி யுள்ளதாகவும் மலேரியா எதிர்ப்பு பிரச்சார பிரிவு தெரி வித்துள்ளது.

2016 ஆம் ஆண்டில் மலே ரியா இல்லாத நாடாக இல ங்கை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அண்மையில் பதிவான நோயாளர்கள் வெளிநாட் டிலிருந்து திரும்பியவர்கள் என தேசிய மலேரியா எதிர்ப்பு பிரச்சார பிரிவு குறிப்பிட்டுள் ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 - இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: O/L,Work(Gov)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16140

பிறப்பு:1996- இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம்:5' 3"
தகைமை/தொழில்- Software Engineer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16141

பிறப்பு:1980 - இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 17 1/2
உயரம்:5' 5"
தகைமை/தொழில்:O/L,கூட்டுறவு சங்கம்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/16144

பிறப்பு: 1994 - இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
உயரம்:5' 10"
தகைமை/தொழில் -Bsc,Bank Manager(Canada)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16145

பிறப்பு: 1988- இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி 1 இல் செவ்
கி.பா: 54
உயரம்:5' 7"
தகைமை/தொழில்: BSC, MSC, Engineer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16146

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1998-இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 8 இல் சூரி செவ்
கி.பா: 26 1/2
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: BA
எதிர்பார்ப்பு: பட்டதாரி, உத்தியோகம்
தொ.இ: G/16183

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்:உத்தராடம் 1 இல் செவ்
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்:Engineer(France)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16184

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 7 இல் செவ்
கி.பா: 0
உயரம்: 5' 6"
தகைமை/தொழில்: IELTS,தாதி(pvt)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/16186

பிறப்பு-2005 - இந்து
நட்சத்திரம்: சுவாதி 7 இல் செவ்
கி.பா: 56
உயரம்: 5' 2"
தகைமை/தொழில்:College
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/16188

பிறப்பு-1984 - இந்து
நட்சத்திரம்-அச்சுவினி
கி.பா: 71
உயரம்: 5' 2"
தகைமை/தொழில்: BA, DO
எதிர்பார்ப்பு: Degree and Employee
தொ.இ: G/16189


இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# நாட்டில் டெங்கு மீண்டும் அதிகரிப்பு!

## தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் 11 மாவட்டங்களில் டெங்கு பரவல் மீண்டும் அதிக ரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித் துள்ளது.




மழைக்கால வானிலை கார ணமாக டெங்கு நுளம்புகளின் இனப்பெருக்கம் அதிகரித்துள்ள தாக அதன் சமூக மருத்துவ நிபு ணர் பிரஷீலா சமரவீர தெரிவித் தார்.

இதேவேளை, கடந்த ஆண்டில் 40ஆயிரத்து 392 டெங்கு நோயா ளிகள் பதிவாகியுள்ளதுடன் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, டெங்கு கொசுக் கள் பரவுவதைக் கட்டுப்படுத்த சிறப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டு ள்ளதாக பிரஷீலா சமரவீர மேலும் தெரிவித்தார். (நி)

# விடுமுறைக்காக நுவரெலியா சென்ற 18 பேர் போதைப்பொருட்களுடன் கைது

(நுவரெலியா)

விடுமுறைக்காக பல்வேறு போதைப் பொருட்களுடன் நுவரெலியாவிற்கு வந்த 18 பேர் சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டதாக நுவரெலியா தலைமையக பொலிஸ் தலைமை ஆய்வாளர் தெரிவித்துள் ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் தெமட்டகொட, கம்பஹா, கொழும்பு உள்ளிட்ட இலங்கையில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த, 18 முதல் 28 வயதுக்குட்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட வர்களிடம் இருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட குஷ், ஹெரோ யின், ஐஸ், போதைப்பொருள் மற்றும் வெளிநாட்டு சிகரெட்டுகள் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

நுவரெலியா பொலிஸ் மோப்ப நாய் பிரிவின் உதவியுடன், நுவரெலியாவிற்கு உள் நுளையும் அனைத்து பிரதான வீதிகளை உள்ளடக்கிய பொலிஸ் சோதனை பாதைத் தடைகளைப் பயன் படுத்தி சந்தேக நபர்கள் கைதுசெய்யப் பட்டதாக நுவரெலியா தலைமையக பொலிஸ் தலைமை ஆய்வாளர் தெரி வித்துள்ளார்.

இதேவேளை, கைது செய்யப்பட்டவர் கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படவுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர் பராமரிப்பு நிலையம் திறந்து வைப்பு


(தருமபுரம்)


கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியில் அன்னை நிலா முதியோர்கள் பகல் பராமரிப்பு நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

18 லட்சம் ரூபாய் நிதிப்பங்களிப்பில் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு முதியோர்களின் பயன்பாட்டுக்காக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ் முரளிதரன், தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திசாநாயக்க மற்றும் இராணுவத்தினர் கிராம சேவையாளர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர். (8-316)

# வடக்கில் களை கட்டிய தீபாவளி வியாபாரம்






(வவுனியா)

தீபாவளி திருநாளை முன்னிட்டு வடக்கு மாகாணத்தில் வியாபாரம் களை கட்டியது.

இன்று உலகம் முழுவதும் உள்ள இந்து மக்களினால் தீபாவளி திருநாள் கொண்டாடப்படவுள்ள நிலையில் அதனை கொண்டாடும் முகமாக நாடுமுழுவதும் நேற்று வியாபாரம் களை கட்டியது.

அதன்படி, வர்த்தக நிலையங்களுக்கு அதிகளவிலான மக்கள் வருகை தந்து புத்தாடைகள், வெடிகள், இனிப்பு பண்டங்களை கொள்வனவு செய்ததை அவதானிக்க முடிந்தது. (நி-104-315-316)

# சிவகுரு ஆதீனத்தில் 'சிவகுரு சங்கமம்'


(யாழ்ப்பாணம்)

தீபாவளி சிவகுரு சங்கமம் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணி முதல் 5 மணி வரை சிவகுரு ஆதீனத்தில் இடம்பெறும்.

"சிவகுரு சங்கமம்" எனப்படுவது எமது பண்டிகை நாட்களில் சிவகுரு ஆதீனத்தில் அன்பர்கள் அனைவரும் ஒன்று கூடி ஆதீனமுதல்வரிடம் அறிவுரை கேட்டு ஆசி பெற்று, சிற்றுண்டிகளை பகிர்ந்து உண்டு கலந்துரையாடி மகிழ்தலாகும்.

எனவே இன்றைய தினம் தாங்களும் பட்டாசு, சிற்றுண்டி வகைகளுடன் சிவகுரு சங்கமத்தைச் சிறப்பிக்கலாம். அத்துடன் தனி நிகழ்வுகள் செய்ய விரும்புவோர் ஆயத்தமாக வரலாம். அங் அமைதியை அனுபவிக்கலாம். ஆனந்தம் பெறலாம். அனைவரையும் வருகை தருமாறு சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் அறிவித்துள்ளார். (8)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 . 09 . 1950 | 12 . 10 . 2025 |

## அமரர் பொன்னுத்துரை சிவராசா

மாதனை பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்தை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிவராசா அவர்கள் 12.10.2025 ஞாயிற்றுக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-சிவபாக்கியம் தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம்-தங்கமுத்து தம்பதியரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை-அன்னபூரணம் தம்பதியரின் மருமகனும், இந்திராணியின் அன்புக்கணவரும், மங்கையற்கரசியின் பாசமிகு சகோதரனும் சுகன்யாவின் அன்புத் தந்தையாரும், இராமச்சந்திரன், ஜெயகாந்தன், தங்கமலர் ஆகியோரின் மைத்துனரும் நடராசா, கலையரசி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் பிரதீபன், துஷ்யந்தன், பாமதி, ஜெயந்தன், தனஞ்சயன், தமயந்தி, ஜெகதீசன், சிவதர்மினி, சுரபி ஆகியோரின் மாமனாரும் வசந்தன், சுகந்தன், காயத்ரி, கோபாலன், குணச்செல்வன், கோபினி, கார்த்திகா ஆகியோரின் சிறிய தந்தையாரும் சாருஹா, தருண், அபிநயா, மாதினி, துதிகன், சதுஷ்ணா, துஷானா, வர்ஷா, சரண், மாதங்கி, பரணிகா, ஆத்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.10.2025 இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் Friedhof Oberkirch, Oberkirch Und stadtgartnasse , 66, 8500 Frauenfeld, Switzerland இடம்பெற்று பிற்பகல் 1 மணியளவில் Rosenberg 19,8400 Switzerland தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மாதனை,
பருத்தித்துறை.
077 526 2640 (1662)

தகவல் -
இ.நடராசா குடும்பத்தினர்

# இராசிபலன்

20.10.2025
ஐப்பசி 03, திங்கட்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 4.09 மணி வரை

அத்தம் முன்னிரவு 9.18 மணிவரை
சுப நேரம் 12.02-1.32 மணிவரை
இராகு காலம் 7.32-9.02 மணிவரை
சுபமுகூர்த்த நாள், தீபாவளி

சந்திராஷ்டமம்
சதயம், பூரட்டாதி

வளவன்

**மேஷம்**
கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் பெருகும், தொழிலில் இருந்த எதிர்ப்புக்கள் விலகும், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்**
நேற்றைய பிரச்சினை ஒன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், நிதிநிலை உயரும் வாய்ப்புண்டு, உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும்

**துலாம்**
ஒரு சில வேலைக்காக நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை ஏற்படலாம், புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், தேக நலனில் கவனம் தேவை

**மகரம்**
ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**ரிஷபம்**
அரசு வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்,

**சிம்மம்**
ஆடம்பர பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பேச்சில் இனிமை தென்படும், மதிப்பும் மரியாதையும் உயரும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
வீட்டுத் தேவை எளிதில் பூர்த்தியாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கும்பம்**
மற்றவர்களிடம் பேசும் போது நிதானம் காட்டுவது நல்லது, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**மிதுனம்**
பொதுக்காரியங்களில் நாட்டம் கூடும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பணவரவு திருப்தி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கன்னி**
குடும்பத்தினரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**தனுசு**
உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தொழில் ரீதியாக புதிய முதலீடுகளை செய்யும் எண்ணம் உருவாகும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**மீனம்**
விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

யாரோ எழுதியது அல்ல உன் வாழ்க்கை, நீ எழுதுவது தான் உன் வாழ்க்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச பண்பாட்டு கலாசாரப் பெருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் கலாசார அடையாளங்களை தாங்கிய 40 ஊர்திப் பவனிகளுடன் சிறப்பாக நடைபெற்றது. குறித்த நிகழ்வானது புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது. (படம்- சதீஸ்)

## சர்வதேச குறுந்திரைப்பட விழாவில் மன்னார் சிறுமிக்கு விருது



(நெளுக்குளம்)

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற "International Art & Heart Film Festival - 2025" சர்வதேச குறுந்திரைப்பட விழாவில், மன்னாரைச் சேர்ந்த கவிவர்மன் இயக்கிய "மடமை தகர்" குறுந்திரைப் படம் விருது வென்று ஈழத்துக்குப் பெருமை சேர்த்துள்ளது.

இத்திரைப்படத்தில் முதன்மை கதாபாத்திரமாக நடித்த மன்னார் ஓலைத்தொடுவாய், சின்ன கரிசல் பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமி ரஞ்சித் குருஸ் சுவேதா, "Best Monologue" என்ற விருதை வென்றுள்ளார்.

தற்கொலை என்பது ஒரு தீர்வல்ல என்பதை மையக் கருவாகக் கொண்டு உருவாக்கப்பட்ட "மடமை தகர்" குறுந்திரைப்படம், இதற்கு முன் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற சர்வதேச குறுந்திரைப் பட விழாவில் "சிறந்த இயக்குநருக்கான விருதையும் வென்றிருந்தது.

சினிமா துறையில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற மன்னாரைச் சேர்ந்த சிறுமி சுவேதா, இவ்விருதின் மூலம் முதன்முறையாக சர்வதேச நீதியில் விருதை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (8-299)



தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு மீசாலை பொது நூலகத்தினால் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் கருத்தமர்வு ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மாணவர்களுக்கு இலக்கு நிர்ணயம், தயார்படுத்துதல், சிறந்த சமுதாய மாற்றம் மற்றும் தொழிநுட்ப பிறழ்வுகள் தொடர்பான கருத்தமர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. (படம்-சுபேசன்)



ஹற்றன் நஷனல் வங்கியின் கொடிகாமம் கிளையின் 14ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடைக் குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் மரநடுகை நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. (படங்கள்- சுபேசன்)

## தென்மராட்சிப் பகுதியில் குரங்குகளைக் கட்டுப்படுத்த வாயுத்துப்பாக்கிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் குரங்குத் தொல்லையினை கட்டுப்படுத்த சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு வாயுத் துப்பாக்கிகள் வழங்க வேண்டும் என நகராட்சி மன்ற உபதவிசாளர் ஞா.கிஷோர் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்ற அமர்வில் கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தார்.

குறித்த கோரிக்கையை அனைத்து சபை உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டதையடுத்து சபை நிதியில் இருந்து துப்பாக்கிகள் கொள்வனவு செய்வது என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (8-30)




அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் கல்வி, கலாசார பிரிவின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில், 9 ஏ சித்திகளை பெற்ற மாணவர்கள் மற்றும் உயர்தர பரீட்சையில் 3 ஏ சித்திகளை பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.(படம்- ஜோசப்நயன்)




தென்மராட்சி மட்டுவில் கிழக்கு வில்சன் சனசமூக நிலையத்தின் முதியோர் தின நிகழ்வுகள் அண்மையில் இளஞ்சிட்டுக்கள் சிறுவர் கழக மைதானத்தில் சனசமூக நிலையத் தலைவர் வ.தவராசா தலைமையில் இடம்பெற்றன. (படம்-சு[illegible])

## அனைவரின் வாழ்க்கையிலும் நம்பிக்கை ஒளி வீசட்டும்!

### தீபாவளி வாழ்த்துச் செய்தியில் ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

நம் மனத்திலிருந்தும் சமூகத்திலிருந்தும் இருளை - அறியாமை - பொறாமை - தீமை அகற்றி ஒளியை அறிவு - அன்பு - நம்பிக்கை - பரப்பும் திருநாளாகும். இந்த இனிய நாளில், ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நம்பிக்கையும் சந்தோஷமும் ஒளி வீசட்டும் என வடக்கு மாகாண ஆளுநர் [illegible] அனுப்பி வைத்த தீபாவளி வாழ்த்துச் செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒளியின் திருநாளாகிய தீபாவளி, இருளை அகற்றி ஒளியைப் பரப்பும் நல் வழியைக் குறிக்கின்றது. தீமையை வீழ்த்தி நன்மை வெற்றி பெறும் நினைவூட்டலாகவும், அன்பு, ஒற்றுமை மற்றும் அமைதி நிலவும் சமூகத்தை உருவாக்கும் ஊக்கமாகவும் இந்தப் பண்டிகை விளங்குகிறது. இந்நாளின் ஒளி அனைவரின் இதயங்களிலும் நல் வாழ்வையும் செழிப்பையும் நிரப்பட்டும். இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள் என அவர் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாற்றுவதைக் காட்டிலும் தோற்றுப்போவது மரியாதைக்குரியது. – ஆபிரகாம் லிங்கன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தூய்மையான ஒளி இன்னமும் தமிழ் மக்களுக்கு கிடைக்கவில்லை

இன்று தீபாவளித் திருநாள். தீபங்கள் ஏற்றி வழிபடுகின்ற நன்நாள். தீபங்கள் ஒளியைத் தருவன. ஒளி இருளை அகற்றுவது.

இருளை அகற்றவல்ல ஒளி தூய்மையானது. அதனாலேயே உலகம் முழுமையிலும் ஒளி தூய்மையின் அடையாளமாக அமையப் பெற்றது.

ஆம், இன்று உலகம் முழுமையிலும் கொண்டாடப்படும் தீபாவளித் திருநாள் நரகாசுரன் எனும் அசுரனை நாராயணன் வதம் செய்த நாளாக அமைகிறது.

நரகாசுரன் எனும் அசுரன் தேவர்களுக்கு கொடுமையும் அநீதியும் இழைக்க, அதனால் தேவர்கள் பெரும் துன்பமடைந்தனர்.

அசுரனின் கொடுமையைத் தாங்க முடியாத தேவர்கள் நாராயணப் பெருமானிடம் முறையிட, தீயோரை அழித்து நல்லோரைக் காத்தருளும் நாராயணன் நரகாசுரனை வதம் செய்து தேவர்களுக்கு அபயம் அளித்தார்.

தீமை அழிந்து இன்பம் மலர்ந்த அந்த நாள் தீபங்கள் ஏற்றி வழிபடப் பெறலாயிற்று.

ஆக, தீபாவளித் திருநாளின் மூலதத்துவம் தீமை ஒழிய வேண்டும். அசுரர்களாக அடையாளப்படுத்தப்படும் தீயவர்கள் அழிய வேண்டும். அப்போதுதான் மக்கள் நிம்மதியாகவும் மகிழ்வாகவும் வாழ முடியும்.

தவிர, தேவர்கள் துன்பமுற்றவேளை நாராயணனிடம் முறையீடு செய்தனர்.

அந்த முறையீட்டை காத்தற் கடவுள் கருசனையோடு அணுகினார். நரகாசுரனை வதம் செய்து தேவர்களைக் காத்தருளினார்.

அவ்வாறு அபயம் அளித்ததனாலேயே தேவர்கள் சுதந்திரத்தையும் நிம்மதியையும் எய்தினர்.

இங்குதான் ஈழத் தமிழ் மக்களாகிய நாம் ஓர் உண்மையை உரக்கக்கூற வேண்டியுள்ளது.

அதாவது ஈழத் தமிழர்களாகிய எங்களை சிங்களப் பேரினவாதம் துவம்சம் செய்தது.

எங்களைக் காப்பாற்றுங்கள் என நாம் ஓல மிட்டும் அதனை இவ்வுலகம் திரும்பிப் பார்க்க வில்லை.

எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி மற்றும் இன அழிப்புத் தொடர்பில் ஐ.நா சபை வரை முறைப்பாடுகள் சென்றிருந்தாலும் இன்னமும் எங்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

சுருங்கக்கூறின் துன்பப்பட்ட – அவலத்தை சந்தித்த ஓர் இனத்தின் முறைப்பாடு தொடர்பில் இன்னமும் சர்வதேசம் உரிய நடவடிக்கைகளை – உரிய விசாரணைகளை மேற்கொள்ளவில்லை.

இதனால் தமிழ் மக்களின் அரசியல் வாழ்வு இன்னமும் இருளாகவே உள்ளது. தவிர, ஒளியை ஏற்றுவதற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட வேண்டிய தமிழ் அரசியல்வாதிகள் நரகாசுரனை நல்லவனாக ஆக்குகிறார்கள் எனும் போதுதான், தூய ஒளி இன்னமும் தமிழ் மக்களாகிய எங்களுக்குக் கிடைக்கவில்லை என்ற உண்மையை இன்றைய தீபாவளி நாளில் நாம் உரக்கக்கூற வேண்டியுள்ளது.

# இலங்கையில் அரசியல் கட்சிகள் மறைந்து தனிநபர்களின் ஆளுமை மேலோங்கும்

## முன்னாள் ஜனாதிபதி ரணில் உபதேசம்

இலங்கையின் அரசியல் போக்கு வெகுவாக மாற்றமடைந்து வருவதுடன், இதுவரை காலமும் காணப்பட்ட கட்சி அரசியல் மறைந்து, தனிநபர்களின் ஆளுமை மற்றும் செல்வாக்கைச் சுற்றியே அரசியல் சூழல் மையங்கொள்வதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். உலகிலும் இந்த மாற்றம் நிகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய மற்றும் எதிர்கால அரசியல் போக்குக் குறித்து ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினரான வருண ராஜபக்ஷ மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க உள்ளடங்கிய ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுடன், இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் தெளிவுபடுத்துகையில்,

ஜனநாயக நாட்டிற்கு எதிர்க்கட்சியின் செயற்திறன் மிகவும் முக்கியமானது. ஆனால் எதிர்காலத்தில் கட்சி அரசியல் தோல்வியடைந்து, தனிநபர்களைச் சுற்றியே அரசியல் தீர்மானிக்கப்படும். இருப்பினும் பாராளுமன்ற ஜனநாயகத்தில் எதிர்க்கட்சியின் செயற்பாடுகள் மிக முக்கியம் என்பதை உணர வேண்டும்.

ஆனால் இன்று எதிர்க்கட்சி பலவீனமாகவே உள்ளது. எதிர்க்கட்சியாகப் பரந்துபட்டுச் செயற்படாமல், சில நபர்கள் மட்டுமே எதிர்க்கட்சியாகச் செயற்படுகின்றனர். உதாரணமாக சாமர சம்பத், தயாசிறி ஜயசேகர போன்றவர்கள் உள்ளனர்.

உத்தேச பொதுக் கூட்டணியின் தலைமைத்துவத்தை ஐக்கிய மக்கள் சக்தி பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறது. இதற்கு நான் இணங்கமாட்டேன் என்று கருதுகின்றனர். அவ்வாறில்லை. அவர்களின் கோரிக்கையை நான் ஏற்றுக்கொண்டால், கூட்டணியின் எதிர்காலம் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் திட்டம் என்ன என்ற கேள்வி உள்ளது.

பிளவுபட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரு கட்சிகள் மட்டுமல்லாமல், அனைத்து கட்சிகளும் அரசியல் நிலப்பரப்பில் மறைந்து போகலாம். இலங்கையில் மட்டுமல்ல, முழு உலகிலும் தனிநபரைச் சார்ந்த அரசியல் உருவாகி வருகிறது. உலகெங்கிலும் கட்சிக் கட்டமைப்புகளை விட, தனிநபர்களின் ஆளுமை மற்றும் செல்வாக்கைச் சுற்றியே அரசியல் முடிவுகள் எடுக்கப்படும் ஒரு காலகட்டம் வருகிறது என்றார். (ந-7)

# தேர்தலில் களம் இறங்க பொலிஸ் சான்றிதழ் அவசியம்

## இது மொட்டுவின் திட்டம் என்கிறார் நாமல்

(கொழும்பு)

போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்களுடன் தொடர்பில்லை என்று பொலிஸ் சான்றிதழ் பெற்றுக்கொண்டவர்களுக்கு மாத்திரமே தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்குவோம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற இளைஞர் அமைப்புகளுடனான சந்திப்பின் பின்னர் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாணசபைத் தேர்தலை அடுத்த ஆண்டு நடத்துவதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆகவே நாங்கள் அந்தத் தேர்தலுக்குத் தயாராகவே உள்ளோம்.

அரசாங்கம் குறிப்பிட்ட பொய்களை மக்கள் நன்கு அறிந்து கொண்டுள்ளார்கள்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிடுவதற்குப் பெரும்பாலான இளைஞர், யுவதிகள் முன்வந்துள்ளார்கள். நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் தேசத்தை முன்னிலைப்படுத்தியே நாங்கள் செயற்படுகிறோம்.

போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்களுடன் தொடர்பில்லை என்று பொலிஸ் சான்றிதழ் பெற்றுக்கொண்டவர்களுக்கு மாத்திரமே தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்குவோம். எனவே பொலிஸ் சான்றிதழ் ஒப்படைப்பது கட்டாயமாக்கப்படும் என்றார். (ந-7)

## வாடகைக்கு வீடெடுத்து

# கஞ்சா பயிரிட்டு வந்த வெளிநாட்டவர் கைது

அக்மீமனப் பகுதியில் வாடகைக்குப் பெறப்பட்ட வீட்டில் கஞ்சா பயிரிட்டு வந்த பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவரைக் காலி மாவட்டக் குற்றப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

குறித்த வீட்டின் இரண்டு அறைகளில் அவர் கஞ்சா பயிரிட்டுள்ளதுடன் நாட்டிற்கு வருகை தரும் வெளிநாட்டவருக்கு விற்பனை செய்வதற்காக அவர் கஞ்சா பயிரிட்டுள்ளதாகவும் பொலிஸார் முன்னெடுத்த முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த வீடு காரப்பிட்டிய வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவருக்கு சொந்தமானது என்றும் சந்தேக நபர் வீட்டை வாடகைக்கு எடுத்து அதற்காக மாத வாடகையாக 1.5 இலட்சம் ரூபாவை செலுத்தியதாகவும் கூறப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தென் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கித்சிறி ஜெயலத்தின் அறிவுறுத்தலின் பேரில் காலி மாவட்ட குற்றப்பிரிவின் பணிப்பாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் நாமல் பெரேரா தலைமையிலான பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந-7)

# கார் – பிக்கப் விபத்து; ஆசிரியர் ஒருவர் பலி

## இருவர் காயம்

(பதவியா)

பதவியா - ஹெப்பட்டிபொலாவ பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் வவுனியாவைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் மரணமடைந்துள்ளதுடன் இரண்டு ஆசிரியர்கள் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பதவியாப் பகுதியில் இடம்பெற்ற மரணச் சடங்கு ஒன்றிற்குச் சென்றுவிட்டு திரும்பிய ஆசிரியர்கள் பயணித்த கார் பதவியா - ஹெப்பட்டிபொலாவ வீதியில் உள்ள மகாநெட்டியாவப் பகுதியில் எதிரே வந்த பிக்கப் ரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் வவுனியா மடுக்கந்த ஸ்ரீ தம்மரத்ன வித்தியாதன பிரிவேனாவின் ஆசிரியர் சஞ்சீவா அவர்களே மரணமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் ஹெப்பட்டிப்பொலாவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் உலக கிண்ண தொடர்;
## அரையிறுதிக்கு முன்னேறியது தென்னாபிரிக்கா




13 ஆவது மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற்று வருகிறது.

இதன் 19 ஆவது லீக் ஆட்டத்தில் நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகள் மோதின. மழை காரணமாக 46 ஓவராகக் குறைக்கப்பட்டது. முதலில் துடுப்பாட்டம் செய்ய களமிறங்கிய பாகிஸ்தான் 25 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 92 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மீண்டும் மழை பெய்தது. தொடர்ந்து மழை நீண்ட நேரம் நீடித்ததால் இந்த ஆட்டம் ரத்து செய்யப்பட்டு, இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி பகிர்ந்தளிக்கப்பட்டது.

இந்நிலையில், நடப்பு தொடரில் 5 போட்டிகளில் விளையாடி 4 வெற்றிகளைப் பெற்று புள்ளிப் பட்டியலில் 8 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தில் இருந்த தென் ஆப்பிரிக்கா 2 ஆவது அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது.

ஏற்கனவே அவுஸ்திரேலியா அணி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது. மற்ற 2 இடங்களுக்கு இங்கிலாந்து. இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையே கடும் போட்டி நிலவுகிறது. (3)

## பாகிஸ்தான் - இலங்கையுடனான
# முத்தரப்பு தொடரில் இருந்து ஆப்கானிஸ்தான் விலகல்


ஆப்கானிஸ்தான் உள்ளூர் கிரிக்கெட் வீரர்கள் மூவர் பாகிஸ்தான் தாக்குதலில் கொல்லப்பட்டதை அடுத்து, அடுத்த மாதம் பாகிஸ்தான் மற்றும் இலங்கையுடனான முத்தரப்புத் தொடரில் இருந்து ஆப்கானிஸ்தான் விலகியுள்ளது.

பாகிஸ்தான் எல்லையில் உள்ள கிழக்கு பாக்டிகா மாகாணத்தில் இருந்து ஷரா னாவுக்கு, போட்டி ஒன்றில் பங்கேற்க வீரர்கள் பயணம் செய்தபோதே, பாகிஸ்தானிய தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

இதற்கு ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வாரியம் கடும் கண்டனத்தைத் தெரிவித்து உள்ளது.

இதுதொடர்பாக கிரிக்கெட் வாரியம் கூறும் போது, பாகிஸ்தானின் இந்த கோழைத்தனமான தாக்குதலில் துணிச்சலான கிரிக்கெட் வீரர்கள் உயிரிழந்ததற்கு ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தத் துயர சம்பவத்திற்கு பதிலளிக்கும் விதமாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாகவும் அடுத்த மாதம் பாகிஸ்தானில் நடைபெற உள்ள முத்தரப்பு 20 ஓவர் போட்டித் தொடரில் இருந்து ஆப்கானிஸ்தான் அணி விலக முடிவு செய்துள்ளது என்று தெரிவித்துள்ளது. (3)




## ஒருநாள் கிரிக்கெட் தொடர்
# மேற்கிந்திய தீவுகளை வீழ்த்தி பங்களாதேஷ் அபாரம்




மேற்கிந்திய தீவுகள் அணி 3 ஒருநாள் மற்றும் 3 ரி-20 போட்டிகளில் விளையாடுவதற்காக பங்களாதேஷ் சென்றுள்ளது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் போட்டி டாக்காவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி பங்களாதேஷ் முதலில் பேட்டிங் செய்தது.

தவ்ஹித் ஹிரோடி அரை சதமும் மெஹிதுல் இஸ்லாம் அங்கோன் 46 ஓட்டங்களும் ஷான்டோ 32 ஓட்டங்களும் அடிக்க பங்களாதேஷ் 49.4 ஓவரில் 207 ஓட்டங்கள் எடுத்து அட்டமிழந்தது.

பின்னர் 208 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கிந்திய தீவுகள் களம் இறங்கியது. தொடக்க வீரர் பிராண்டன் கிங் சிறப்பாக விளையாடி 44 ஓட்டங்கள் அடித்தார். மற்றொரு தொடக்க வீரர் அலிக் அதானஸ் 27 ஓட்டங்கள் சேர்த்தார்.

அதன்பின் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க, மேற்கிந்திய தீவுகள் 39 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்து 133 ஓட்டங்களில் சுருண்டு. 74 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. ரிஷாத் ஹொசைன் 6 விக்கெட்டுகள் சாய்த்தார்.

2 ஆவது போட்டி நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (3)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 150 | 200 | 200 | 150-200 | 90 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 200 | 240 | -- | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 200 | 300 | 200 | 180 |
| தக்காளி | 300 | 240 | 200 | 250 | 200 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 300 | 150 | 200 | 80 |
| கோவா | 200 | 150 | 250 | 200 | 140 | 100 |
| கரட் | 250 | 250 | 200 | 250 | 200 | 160 |
| பூசணி | 80 | 60 | 50 | 80 | 50 | 25 |
| புடோல் | 200 | 300 | 200 | 300 | -- | -- |
| வாழைக்காய் | 150 | 100 | 100 | 160 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 180-300 | 300 | 300 | 140-220 | 200 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 200 | 200 | 170 | 145 |
| பாகற்காய் | 500 | 400 | 500 | 600 | 400 | 250 |
| வெண்டக்காய் | 150 | 200 | 150 | 300 | 200 | 100 |
| கருணைக் கிழங்கு | 350 | 200 | 250 | 300 | 200 | 200 |
| பயற்றங்காய் | 350 | 300 | 200 | 400 | 300 | 250 |
| லீக்ஸ் | 300 | 250 | 200 | 250 | 180 | 130 |
| பீற்றூட் | 150 | 120 | 150 | 150 | 100 | 60 |
| கறிமிளகாய் | 450 | 450 | 400 | 400 | 400 | 250 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 200 | 200 | 120 | 100 |
| போஞ்சி | 500 | 450 | 450 | 500 | 350 | 270 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 200 | 160 | -- | -- |
| கீரை – 1 பிடி | 150 | 80-150 | 150 | 150 | 120 | -- |
| தேசிக்காய் | 1500 | 1400 | 2000 | 1500 | -- | -- |
| தேங்காய் (ஒன்று) | 200 | 180 | 150 | 150-200 | -- | 150 |
| இராசவள்ளி | 800 | 850 | 1000 | 800 | 700 | 750 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 500 | 450 | -- | -- |
| முள்ளங்கி | 150 | 150 | 150 | 250 | 100 | 60 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 150 | 80 | -- | 35 |
| வல்லாரை | 80 | 50 | 100 | 100 | -- | 40 |
| [illegible] | 100 | 150 | 150 | -- | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கிலியை...

சென்றுள்ளார்.

இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. விசாரணைகளின் அடிப்படையில், சம்பவம் இடம்பெற்று 24 மணிநேரத்துக்குள் அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரை சுன்னாகம் பொலிஸார் கைது செய்தனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த சம்பவத்திற்கு அவர் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளதுடன் குறித்த நபர் அறுத்த சங்கிலியை அடகு வைத்துள்ள விடயமும் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,104)






















## யாழில் அரங்...

வழங்கப்பட்டுள்ள சத்தியக்கடதாசி ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் இயங்கி வரும் இலங்கை பொறுப்புக் கூறல் செயற்றிட்டத்தின் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் இழைத்த குற்றங்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டமை, மனிதப் புதைகுழிகள் மற்றும் அவற்றுக்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் உள்ளிட்ட சகல உண்மைகளையும் எதிர்வருங் காலங்களில் சாட்சியம் அளிப்பதற்குத் தயாராக உள்ள விடயங்களையும் உள்ளடக்கி கடந்த 4ஆம் திகதி சோமரத்ன ராஜபக்ஷ சிறைச்சாலையில் அவரது சட்டத்தரணி முன்னிலையில் சத்தியக்கடதாசி வழங்கியிருந்தார்.

இந்நிலையில் அச்சத்தியக்கடதாசியின் பிரதி கடந்த வாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கிடம் கையளிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து மற்றுமொரு பிரதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் இயங்கிவரும் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தின் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது. (ந-7)

## விஜித ஹேரத்...

பெறவுள்ள நான்காவது அழகியல் மற்றும் மருத்துவ அறிவியல் மாநாடு மற்றும் கண்காட்சியில் கலந்து கொள்வதற்காகவே அவரது குறித்த விஜயமானது முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்போது அமைச்சர் விஜித ஹேரத், இந்த மாநாட்டில் பங்கேற்பதுடன், சவுதி அரேபிய அரசாங்கத்தின் முக்கிய தலைவர்களையும், அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளார். இந்தச் சந்திப்புகள் மூலம் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது, புதிய வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை ஆராய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

அத்துடன் சவுதி அரேபியாவில் பணிபுரியும் 5 இலட்சத்திற்கும் அதிகமான இலங்கைத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பது குறித்தும் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பாதாள...

கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

"இதுவரை கைது செய்யப்பட்டுள்ள பாதாள உலகக் குழு உறுப்பினர்களுக்கு நீதிமன்றத்தின் ஊடாக உரிய தண்டனை வழங்கப்படும். இவர்களுடன் தொடர்புடைய நபர்கள், அரசியல்வாதிகள் எவரும் தப்ப முடியாது. அவர்கள் அனைவரையும் கைது செய்தே தீருவோம்,

பாதாள உலகக் குழுவினரை ஒழித்துக்கட்டும் நடவடிக்கைகளில் அரசு தீவிரமாகவுள்ளதாகவும் "உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தலைமறைவாகியுள்ள சகல பாதாள உலகக் குழுவினரையும் கைது செய்து சிறையில் அடைப்போம். இந்த ஆட்சியில் பாதாள உலகக் குழுவினரைக் கூண்டோடு ஒழித்துக் கட்டியே தீரவோம்," என்றும் பொதுமக்கள்

பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால உறுதியளித்தார். (ந-7)

## போதைவஸ்து...

இதன்போதே கஞ்சா, அதுசார்ந்த போதைப்பொருட்களை உடைமையில் வைத்திருந்தமை, போதை மாத்திரைகளை வைத்திருந்தமை, மாவாப்பாக்கினை வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பத்து நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

## போதை மாத்...

கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணப் பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளின் பின், அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,104)

## மர...

இரவிரவாக இடம்பெற்று வருவதாகப் பிரதேச மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இயற்கைச் சமநிலையைப் பேணுவதற்கான இத்திட்டத்தைச் செயற்படுத்த வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் காணியை வழங்கியதால், பிரதேச செயலகம் உடனடியாக உரிய நடவடிக்கை எடுத்து, இந்தச் சுற்றுச்சூழல் சீரழிவை நிறுத்த வேண்டும் எனப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-7)

## யாழில் விபத்து; இளைஞன் படுகாயம்

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.


நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குறித்த விபத்துத் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பிறவுண் வீதி கலட்டிச் சந்திக்கு அருகாமையில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-க)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

நல்ல நிலையில் உள்ள கொங்கிறீற் மிக்சர் விலைக்குத் தேவை.

077 736 1215
076 423 7053

(1663)

## யாழ்ப்பாணத்தில் Voyzant

கனடாவை தலைமையகமாகக் கொண்ட உலகளாவிய "வொய்சன்" நிறுவனத்தின் சேவைகள்

- ◆ விமான பயணச்சீட்டுக்கள்
- ◆ பயணக் காப்புறுதி
- ◆ விசா சேவைகள்
- ◆ வெளிநாட்டு சுற்றுலா

மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866

(C-4109)

## மணமகள் தேவை

யாழ். வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1986, திருவோணம் 3ஆம் பாதம் (2ல் செவ்வாய்) கடையில் பணியாளராகக் கடமையாற்றும் மணமகனுக்கு மணமகள் தேவை. சைவபோசன மணமகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

077 191 7936

(1665)

## மணப்பெண் தேவை

01) மண்டைதீவு - கோண்டாவில், இந்து, 1989, மூலம், MBBS Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. - 54906
02) காரைநகர் - இணுவில், 1995, மகம், MBBS, B.D.S. Dental surgeon மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. - 53958
03) மாங்குளம், இந்து, 1994, பரணி, MBBS, FLAP Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. - 48027
04) பருத்தித்துறை, இந்து, 1996, சதயம், MSc in Computer Science, IT engineer, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. - 40863
05) நயினாதீவு, இந்து, 1988, உத்திரட்டாதி, MBBS Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. - 40669
06) கரவெட்டி - புதுக்குடியிருப்பு, இந்து, 1987, மிருகசீரிடம், BSc, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
07) புலோலி, இந்து, 1982, விசாகம், BSc, USA Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. - 38431
08) வண்ணார்பண்ணை - சுதுமலை, இந்து, 1976, ரேவதி, MBBS Doctor, UK Citizen Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. - 37640
09) நீர்வேலி, இந்து, 1989, சுவாதி, Phd in chemistry, South Korea மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. - 36432
10) கச்சேரியடி, இந்து, 1981, Roman catholic, Masters, Business Analyst, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. - 36343

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

(5689)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

## 22 விற்பனைக்கு 22

- யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 10 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடிக்கடையும் 16 அடி அகலமும் 60 அடி நீளமும் கொண்ட தனிக்கடையும்
- யாழ். விக்டோரியா வீதியில் 16 பரப்பும் 12 பரப்புக் காணியும்,
- யாழ். KKS வீதியில் கந்தர்மடச் சந்திக்கு அண்மையில் 3 பரப்பில் அமைந்த மாடி வீடும்
- யாழ். பலாலி வீதி பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 200 அடி அகலமும் 400 அடி நீளமும் கொண்ட காணியும்,
- யாழ். பலாலி வீதியில் அம்மாச்சி கடைக்கு அண்மையில் 200 அடி நீளமும் 200 அடி அகலமும் கொண்ட பலாலி வீதி முகப்புடன் உடைய காணியும்,
- யாழ். நல்லூர் கோயிலுக்கு அண்மையில் 22 பரப்புக் காணியும் உடன் விற்பனைக் குண்டு.

தொடர்புகளுக்கு :

077 723 2535

(C-4148)

## கனடா - வரி இல்லாமல்
### விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3670/- |
| 11-16 Kg | 2640/- |
| 21-27 Kg | 2440/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-4150)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241, 076 822 6237

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- இருந்து 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-4150)

V2 TRAVELS 076 1410725, 076 8226236
v2vacancies@gmail.com


## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378 | 076 097 3127

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 06.07.1935

உதிர்வு 20.09.2025



எமதருமைத் தந்தை

## அமரர் வைத்தியகலாநிதி மயில்வாகனம் மகேசன்

அவர்களது 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை எதிர்வரும் 22.10.2025 புதன்கிழமை காலை 11.00 மணியளவில் இல. 17. அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத் தருணத்திலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்துப சாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் வருகையும் பிரார்த்தனையும் எம் குடும்பத்திற்கு மிகுந்த ஆறுதல் தருவதாக அமையும். பரம்பொருளின் பாதக் கமலங்களில் சிவ ஐக்கியமடைந்த எம்பிதா என்றும் எம் நெஞ்சகத்தில் நீங்காது நீள நினைத்திருப்போமாக.

இல.17, அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்

# நெஞ்சார்ந்த நன்றிகள்

எம் முதல்வனாய், முகவரியாய், முழுவதுமாய் நின்ற எமது குடும்பத் தலைவர் அமரரான செய்தி கேட்ட நேரம் முதல் எம்மோடு கூட நின்று துயர் பகிர்ந்த உறவுகள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் தூர தேசத்திலிருந்து எம் இதயத் துடிப் பறிந்து உணர்வுகளால் அருகிருந்த உறவுகள், உண்டி கொடுத்தெம் உண்மையன்பை உயிர்ப் பித்தோர், மலர்களால் எம் மகேசப் பெருமானின் பூதவுடலைப் பூசித்தோர், மாறாதென்று மருத் துவம் மனதுரைத்தாலும் ஆறாத அர்ப்பணிப்பை அள்ளித் தந்து எம் அருகிருந்த மதிபா மகிழகப் பணியாளர்கள், உற்ற துணையாக உடனிருந்த ஊரறியா உத்தமர்கள், ஊன் உடம்பு விட்டகன்ற நாள் வரையும் பேரானந்தப் பெருவாழ்வு வாழ வல் லமை மிகு இறையருள் ஈந்த சமயப் பெரியோர் கள், தன்னலமற்று தந்தையாரின் நோய் தணித்த மருத்துவ சமூகம் என அனைத்து விதத்திலும் எம் அரணான தந்தையின் இழப்பின் போதும் அதற்கு முன்னரும் ஆறுதல் அளித்த அனைவருக்கும் அன்பால் அகவணங்கி எம் நெஞ்சார்ந்த நன்றி யறிதலை சமர்ப்பணமாக்குகின்றோம்.

இல.17, அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(1661)

குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org